**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண். 135/2016**

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

வா.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல்,எம்.ஏ.,எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கோபால் | த/பெ.: | தங்கவேல் |
| கிராமம்: | மன்னார்குடி | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | பொது மேலாளர் (பொறுப்பு) நகர கூட்டுறவு வங்கி, மன்னார்குடி (பணி நிறைவு) |
| வயது: | 68 | முகவரி: | 18A/5 மேலவிழல்காரத் தெரு, மன்னார்குடி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.01.2024

<u>முதல் விசாரணை</u> :-

எனக்கு வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளைத் தெரியும். மேற்படி வாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

வழக்கு தாக்கல் செய்த வாதி எனது நண்பரின் மனைவி மற்றும் உறவினர். நானும் வாதியின் கணவரும் மன்னார்குடி நகர கூட்டுறவு வங்கியில் ஒன்றாக கிட்டத்தட்ட 33 வருடங்கள் பணியாற்றினோம். அவர் அழைத்ததன் பேரில் நான் இங்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதியின் கணவர் எனக்கு முன்னால் எங்களது வங்கியில் பொது மேலாளராக இருந்து பணியில் இருந்து ஓய்வு பெற்றார். வழக்கு சொத்தானது மேலவிழல்காரத்தெருவில் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண். 18 ஏ/5 ஆகும். தனபாலின் கதவு எண் எனக்கு தெரியாது. எந்த நகர புல எண்ணுக்காக வழக்கு நடைபெறுகிறது என்பது எனக்கு சரியாக தெரியாது. வாதி பிரதிவாதியின் பத்திரத்தை நான் பார்க்கவில்லை. வாதி, பிரதிவாதி இருவரும் எவ்வளவு சொத்தை கிரயம் வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதி வீட்டின் இடையே காம்பவுண்ட் சுவர் உள்ளது. அது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணில் காம்பவுண்ட் உள்ளது என்பது எனக்கு தெரியாது.

Sd/– கோபால்

Sd/– திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி, மன்னார்குடி.